


இராணிப்பேட்டை தொகுதி வாலாஜாபேட்டை நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்று சிறப்புரை ஆற்றினார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணை செயலாளர் ஆர். வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, நகர அவைத்தலைவர் ஜெ.ஆர்.ஜெகதீசன், நகர கழக செயலாளர் டி.தில்லை, நகர துணைச் செயலாளர் எஸ்.இர்பான் ஜெ.நந்தகுமார், எஸ்.குணசெல்வி சிவந்தி, நகர கழக ச.சசிகுமார், மாவட்ட பிரதிநிதி டபிள்யு. எஸ்.விஜயராகவன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் பி.எல்.டி.சிவா மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### கோயம்புத்தூர்–மாநில வனக் கல்லூரி விளையாட்டுத் திடலில்

# 27வது மாநில வனத்துறை விளையாட்டுப் போட்டிகள்!

### வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்!

கோவை, செப்.21-

கோயம்புத்தூர் மாவட்டம் 27வது மாநில வனத்துறை விளையாட்டுப் போட்டிகளை வனத்துறை அமைச்சர் டாக்டர்.மாமதி வேந்தன் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

கோயம்புத்தூர் மாநில வனக்கல்லூரி விளையாட்டுத் திடலில், 27வது மாநில வனத்துறை விளையாட்டுப் போட்டிகளை 19.09.2024 அன்று வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், முதன்மை தலைமை வனப்பாதுகாவல் மற்றும் வனத்துறைத் தலைவர் முனைவர். சுதான்சு.குப்தா முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை திட்ட இயக்குநர் TBGPCCR மற்றும் பொறுப்பு அலுவலர் மாநில வனத்துறை விளையாட்டுப் போட்டிகள் இ.அன்வர்தீன் வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் ஆனைமலை புலிகள் காப்பகம்) சு.ராமசுப்பிமணியன், மாவட்ட வன அலுவலர் ஜெயராஜ், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், கோயம்புத்தூர் மேற்கு மண்டலக்குழு தலைவர் திருமதி.தெய்வயானை தமிழ்மறை, 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ் சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, தமிழ்நாடு வனத்துறையில் விளையாட்டு பிரிவில் பணி ஒதுக்கீடு பெற்று பணிபுரிந்துவரும் பணியாளர்கள் ஜூடோ, கத்திச்சண்டை, டேக்வாண்டோ ஆகிய சாகச விளையாட்டுகளை அமைச்சர் முன்னிலையில் செய்து காண்பித்தனர்.

26வது அகில இந்திய வனத்துறை விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு வனத்துறை கைப்பந்து அணி மிகச்சிறப்பாக செயல்பட்டு முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் மற்றும் கோப்பை வென்றதை பாராட்டி வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் கேடயங்களை வழங்கினார்.



நாமக்கல் மேற்கு மாவட்ட பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையேற்று பேசினார். இக்கூட்டத்தில் மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ அங்கையற்கண்ணி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ராணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு பேசினர். இதில், மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் பிரியா, மாவட்ட துணை செயலாளர் சாந்தி, ஒன்றிய சேர்மன் சுஜாதா தங்கவேல், நகர்மன்ற தலைவர் நளினிசுரேஷ்பாபு, மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராதிகா, ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், செல்வராஜ், தனராசு, நாச்சிமுத்து, இளங்கோவன், செல்வம், பேரூர் கழக செயலாளர் ராமமூர்த்தி, அம்பிகா பாண்டியன், கயல்விழி, கலா, தேன்மொழி, பாவாயி, சுமதி, ஜெயமணி, இந்திரா, சந்திரா, சினேகா, செந்தமிழ்ச் செல்வி, பாலாஜி, பாலசுப்பிரமணியம், பூக்கடை சுந்தர், கௌதம், சாதிக்பாட்ஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்-

# மகளிர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் சிறப்புரை!

நாமக்கல், செப். 21-

நாமக்கல் மேற்கு மாவட்ட பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையேற்று பேசினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மகளிர்களிர்க்கான மாபெரும் திட்டங்களான விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். திராவிடமாடல் ஆட்சியில் பெண்கள் முன்னேற்றம் கண்டால் தான் சமூக மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் உண்டாகும் என நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன எனவும், மகளிர், மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் வீடு வீடாக சென்று பெண்களை சந்தித்து, நமது திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களையும், பெண்களுக்கு கிடைக்கும் நன்மைகளையும் எடுத்துரைத்து அவர்களை உறுப்பினராக்க வேண்டும். 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளை பெறவேண்டும் என்ற தலைவர் அவர்களின் ஆணையை நிறைவேற்றும் வகையில் செயல்பட வேண்டும் எனவும் கூறினார்.

இக்கூட்டத்தில் மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ அங்கையற்கண்ணி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ராணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு பேசினர். இதில், மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் ரியா, மாவட்ட துணை செயலாளர் சாந்தி, ஒன்றிய சேர்மன் சுஜாதா தங்கவேல், நகர் மன்ற தலைவர் நளினிசுரேஷ்பாபு, மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராதிகா, ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், செல்வராஜ், தனராசு, நாச்சிமுத்து, இளங்கோவன், செல்வம், பேரூர் கழக செயலாளர் ராமமூர்த்தி, அம்பிகா பாண்டியன், கயல்விழி, கலா, தேன்மொழி, பாவாயி, சுமதி, ஜெயமணி, இந்திரா, சந்திரா, சினேகா, செந்திமைழ் செல்வி, பாலாஜி, பாலசுப்பிரமணியம், பூக்கடை சுந்தர், கௌதம், சாதிக்பாட்ஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மக்களின் பல ஆண்டு கோரிக்கை ஏற்பு!

# கும்பகோணத்தில் இருந்து புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கம்!

### அரசு தலைமை கொறடா கோவி.செழியன் தொடங்கி வைத்தார்!

திருவிடைமருதூர்,செப். 21-

திருவிடைமருதூர் அருகே மக்களின் பல ஆண்டு கோரிக்கையை ஏற்று கும்பகோணத்திலிருந்து கல்யாணபுரம், வளைய வட்டம், பருத்திக்குடி வழியாக திருலோகி வரையிலான வழித்தடத்தில் புதிய பேருந்து தொடக்கத்தை அரசு தலைமை கொறடா கோவி.செழியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



திருவிடைமருதூர் அருகே மக்களின் பல ஆண்டு கோரிக்கையை ஏற்று கும்பகோணத்திலிருந்து கல்யாணபுரம், வளைய வட்டம், பருத்திக்குடி வழியாக திருலோகி வரையிலான வழித்தடத்தில் புதிய பேருந்து தொடக்கத்தை தமிழக அரசு தலைமை கொறடா கோவி.செழியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் திருவிடைமருதூர் பேரூர் செயலாளர் சுந்தர.ஜெயபால், திருவிடைமருதூர் ஒன்றிய பெருந்தலைவர் சுபா திருநாவுக்கரசு, ஒன்றிய செயலாளர் அண்ணா துரை, ஆடுதுறை பேரூர் சயலாளர் கோ.சி. இளங்கோவன், கவுன்சிலர் ராஜா, ஒன்றிய கவுன்சிலர்கள் கருணாநிதி, மாவட்ட ஆசாத், வேப்பத்தூர் பேரூராட்சி பெருந்தலைவர் அஞ்சம்மாள் மதியழகன், கும்பகோணம் மண்டல பொது மேலாளர் ராஜா, உதவி மேலாளர் (வணிகம்) தமிழ்ச்செல்வன், கும்பகோணம் நகர்1 கிளைமேலாளர் சுரேஷ், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஓட்டுனர்கள் நடத்துனர்கள், தொழிற்நுட்ப பணியாளர்கள், அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரத்திலிருந்து வளையவட்டம், பருத்திக்குடி வழியாக திருலோகி வரை பேருந்து சேவை தொடக்க வேண்டி இப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சரின்

வழிக்காட்டுதலின்படியும், திருவிடைமருதூர் சட்ட மன்ற உறுப்பினரும் அரசு தலைமை கொறடாவுமான கோவி.செழியன் தீவிர முயற்சியில்

கும்பகோணம் கிளை 1 தடம் எண். 438, கும்பகோணத்திலிருந்து கல்யாணபுரம், வளையவட்டம்,

பருத்திக்குடி வழியாக திருலோகி வரையில் தினசரி 6 நடைகள் இயங்கும் வகையில் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க தொடக்கத்தை கல்யாணபுரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து அரசின் தலைமை கொறடா கோவி. செழியன் கொடியசைத்துதுவக்கி வைத்தார்.

இதில் திருவிடை மருதூர் பேரூர் செயலாளர் சுந்தர.ஜெயபால், திருவிடை மருதூர் ஒன்றிய பெருந்தலைவர் சுபா திருநாவுக்கரசு, ஒன்றிய செயலாளர் அண்ணா துரை,

ஆடுதுறை பேரூர் சயலாளர் கோ.சி.இளங்கோவன், கவுன்சிலர் ராஜா, ஒன்றிய கவுன்சிலர்கள் கருணாநிதி, மாவட்ட ஆசாத், வேப்பத்தூர் பேரூராட்சி பெருந்தலைவர் அஞ்சம்மாள் மதியழகன், கும்பகோணம் மண்டல பொது மேலாளர் ராஜா,

உதவி மேலாளர் (வணிகம்) தமிழ்ச்செல்வன், கும்பகோணம் நகர்1 கிளை மேலாளர் சுரேஷ், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் ஓட்டுனர்கள் நடத்துனர்கள், தொழிற்நுட்ப பணியாளர்கள், அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கொண்டனர்.

### சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம் 2 வழித்தடம் 3-ல்

# 'காவேரி' - சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் பணி நிறைவு!

### திட்ட இயக்குனர்கள் - அலுவலர்கள் பார்வையிட்டனர்!

சென்னை, செப்.21-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை நகரம் முழுவதும் 116.1 கி.மீ நீளத்திற்கு மூன்று வழித்தடங்களுடன் இரண்டாம் கட்ட திட்டத்தை முழு வீச்சில் செயல்படுத்தி வருகிறது.

வழித்தடம் 3இல், கிரீன் வேஸ் நிலையத்திலிருந்து அடையாறு சந்திப்பு நிலையம் வரையிலான சுரங்கப் பாதை பணிகள் பிப்ரவரி 2023இல் தொடங்கப்பட்டன.

ஒவ்வொரு சுரங்கப் பாதையின் நீளமும் 1228 மீட்டர் ஆகும். சுரங்கப் பாதைகள் அடையாறு ஆற்றின் கீழ் 300 மீட்டர் நீளத்திற்கு 1013 மீட்டர் தரை மட்டத்திற்கு கீழ் செல்கின்றன. காவேரி மற்றும் அடையாறு என்ற இரண்டு பூமி அழுத்த சமநிலை (Earth Pressure Balancing EPB) சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன. காவேரி சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெற்றிகரமாக சுரங்கப் பாதை பணியை முடித்துவிட்டு அடையாறு நிலையத்தை வந்தடைந்தது.

இந்த சுரங்கம் தோண்டும் இயந்திரம், சுரங்கத்தின் அடிப்பகுதி பாறை மற்றும் மேற்பகுதி மணல் போன்ற கலப்பு புவியியல் நிலைமைகளைக் கடந்து வந்துள்ளது.

மேலும், அடையாறு ஆற்றின் சில பகுதிகளின் கீழ் கடினமான பாறைகளின் வழியாகவும் சுரங்கப் பாதையை அமைத்தது.

இந்த சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் முகப்பில் உள்ள வெட்டும் கருவிகள் 65 முறை சீரமைக்கப்பட்டு சுரங்கம் தோண்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த பணிகளுக்கு மட்டும் 178 நாட்கள் தேவைப்பட்டது.

காவேரி சுரங்கம் தோண்டும் இயந்திரம் சில பெட்ரோல் பங்குகள், எம்.ஜி.ஆர். ஜானகி கல்லூரி, ஆந்திர சபா மருத்துவமனை, துர்காபாய் தேஷ்முக் சாலை மற்றும் அடையார் பாலம் கீழேயும் கடந்து சென்றது. இரண்டாவது சுரங்கம் தோண்டும் இயந்திரம் அடையாறு தற்போது அடையாறு நிலையத்திலிருந்து 277 மீட்டர் தொலைவில் உள்ளது மற்றும் நவம்பர் 2024க்குள் அடையாறு நிலையத்தை வந்தடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், பொது மேலாளர்கள் ஆண்டோ ஜோஸ் மேனாச்சேரி (சுரங்கப்பாதை கட்டுமானம்), எம்.ரவிச்சந்திரன் (சுரங்கப் பாதை கட்டுமானம்), லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் இயக்குநர் ஜெயராம், திட்ட இயக்குநர் அஹ்மத், பொது ஆலோசகர் நிறுவனத்தின் அணித்தலைவர் டோனி பர்செல், பொது ஆலோசகர் நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் சஞ்சீவ் மண்டல், சுரங்கப்பாதை நிபுணர் ஆலன் சார்லஸ் மே, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் பொது ஆலோசகர் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தளத்தில் இருந்து பார்வையிட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்

### செப்டம்பர் 21 (2002)



திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்

### செப்டம்பர் 21 (2020)



1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "மா.மீ" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். "எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.